**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066963

1. District : மாவட்டம் விழுப்புரம் — PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு — Year: ஆண்டு 2019 — FIR No.: மு.த.அ. எண் 06/2019 — Date: நாள் 12.03.2019

2. (i) Act சட்டம்: PC Act — Sections பிரிவுகள்: Sec 7 of the PC Act 1988
   (ii) Act சட்டம்: — — Sections பிரிவுகள்: as Amended by the PC
   (iii) Act சட்டம்: — — Sections பிரிவுகள்: Act (Amended - 2018)
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 03.11.2018 — Date to : நாள் வரை 18.30 hrs
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 1 கி.மீ, கிழக்கு,
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி விழுப்புரம், ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம், விழுப்புரம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந.தேவநாதன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. N. நடராஜன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர், — (g) Address : முகவரி
   ஊ.த.க பிரிவு, விழுப்புரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. S. அலெக்சாண்டர், வயது 45/18, த/பெ செபாஸ்டியன், தனி வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலம், விழுப்புரம். மற்றும் (4) நபர்கள் விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   துறை அனுமதி பெறவேண்டியிருந்ததால் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......—....................... பதவி ..........—........... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..............—.............................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

ந. தேவராஜன்
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.03.2018 at 14.30hrs

Name: பெயர் (ந. தேவராஜன்)
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர், No. எண் ..........
[illegible], விழுப்புரம்.

## எதிரிகள்

1.திரு.S.அலெக்சாண்டர், வயது-45/2018
த/பெ.செபஸ்டின்,
தனிவட்டாட்சியர்,
ஆதிதிராவிடர் நலம், விழுப்புரம்.
வீட்டு முகவரி:
நெ-3 உப்பளம், பாண்டிச்சேரி

2.திரு.K.மன்னன் வயது 41/2018
த/பெ.கதிர்வேலு,
போதக காப்பாளர்,
அரசு ஆதிதிராவிடர் நல மாணவர்
விடுதி, விழுப்புரம்.
வீட்டு முகவரி:
நெ4, வசந்த விநாயகர் கோயில் தெரு,
வசந்தபுரம், திண்டிவனம்.

3.திரு.K.ஏழுமலை வயது 51/2018
த/பெ.குப்புசாமி,
போதக காப்பாளர்,
அரசு ஆதிதிராவிடர் நல மாணவர்
விடுதி, வளவனூர், விழுப்புரம் மாவட்டம்
வீட்டு முகவரி.
ஆ.கூடலூர் கிராமம்,
ஆயந்தூர் அஞ்சல்,
கண்டாச்சிபுரம் வட்டம்.

4.திரு.G.சங்காலிங்கம் வயது 57/2018
த/பெ.குருலிங்கம்,
சமையலர், அரசு ஆதிதிராவிடர் நல
மாணவர் விடுதி, தும்பூர், விழுப்புரம்.
வீட்டு முகவரி. நெ 21, செஞ்சி
மெயின்ரோடு, ADM நகர், விழுப்புரம்.

5. திரு.M.ராமலிங்கம் வயது 52/2018
த/பெ.முத்து,
காவலர், அரசு ஆதிதிராவிடர் நல
மாணவர் விடுதி, விழுப்புரம்.
வீட்டு முகவரி.
நெ 13, பெரிய சோழவள்ளி,
நெல்லிகுப்பம், கடலூர் மாவட்டம்

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 12.03.2019ந்தேதி 14.00 மணிக்கு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் இயக்குநரகத்தில் இருந்து பெறப்பட்ட குறிப்பாணை எண் SC No.40203/2018/ADW/VPM,Dated:27.02.2019 ன்படி பெறப்பட்ட அனுமதி கடிதத்தின் படி மார்ஜினில் கண்ட எதிரிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ந.தேவநாதன் ஆகிய என்னால் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை விபரம் பின்வருமாறு: கடந்த 03.11.2018 ந்தேதி மாலை சுமார் 18.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியராக பணிபுரியும் திரு.S.அலெக்சாண்டர் என்பவர் தனது நிர்வாகத்தின் கீழ் செயல்படும் ஆதிதிராவிடர் நல விடுதிகளின் போதக காப்பாளர்களிடம் தீபாவளி மாமூல் வசூலிக்கபோவதாக 03.11.2018 ந்தேதி காலை 10.00 மணிக்கு விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ந.தேவநாதன் ஆகிய எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின்படி மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய நான் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக பொறுப்பு வகிக்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.பானுகோபன் என்பவரை அவரது செல்போன் எண் 9445477830-ல் தொடர்பு கொண்டபோது அவர் செல்போனை எடுக்காததால் துணை ஆய்வுக்குழு அலுவலருக்கும் தொடர்பு கொண்டேன் அவருடைய செல்பேசியும் தொடர்பில் இல்லாததால் நான் உயர் அதிகாரிகளை கலந்தாலோசித்து அவர்களின் அறிவுரைப்படி அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி அலுவலகத்தை திடீராய்வு செய்ய உயர்

அதிகாரிகளிடம் உரிய வாய்மொழி உத்தரவு பெற்று, அரசு சாட்சிகளாக இருக்க வேண்டி அழைக்கப்பட்டிருந்த விழுப்புரம் மின்சார வாரியம் கண்காணிப்பு பொறியாளர் அலுவலக நிர்வாக பிரிவில் உதவியாளராக பணிபுரியும் திரு.K.வெங்கடேசன், விழுப்புரம் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.M.நடராஜன் ஆகியோர்கள் 03.11.2018ந்தேதி காலை 11.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்தனர். பின்பு அன்று மாலை 18.00மணிக்கு நான் உயர் அதிகாரிகளிடம் உரிய தகவல் தெரிவித்துவிட்டு அரசு சாட்சிகள் மற்றும் காவல் குழுவினருடன் விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் பாண்டி ரோட்டில் வடக்கு நோக்கி அமைந்துள்ள விழுப்புரம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகத்தில் 03.11.2018 ஆம் தேதி 18.30 மணிக்கு திடீராய்வு மேற்கொள்ள அலுவலகத்தினுள் சென்றபோது அங்கு கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் தனிவட்டாட்சியர் அலுவலக உதவியாளர் திரு.சுதாகர் என்பவர் இருந்தார். அவரது மேசையின் எதிரில் இருந்த நாற்காலிகளில் விழுப்புரம் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி காவலர் திரு.K.ராமலிங்கம் என்பவரும் தும்பூர் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி சமையலர் திரு.சங்கரலிங்கம் என்பவரும் அமர்ந்திருந்தனர். அங்கிருந்தவர்களிடம் தனிவட்டாட்சியர் பற்றி கேட்டபோது அவரது அறையில் உள்ளதாக தெரிவித்தார்கள். பின்பு தனிவட்டாட்சியரின் அறைக்கு சென்று அறைக்கு சென்றபோது அவர் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த அவரது நாற்காலியில் தனிவட்டாட்சியர் திரு.அலெக்சாண்டர் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரில் அமர்ந்துகொண்டு பின்னர் பெயர் தெரிந்த விழுப்புரம் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியின் காப்பாளர் திரு.K.மன்னன் மற்றும் திரு.K.ஏழுமலை, அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி காப்பாளர், வளவனூர் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டபோது அவர்கள் தனது இருக்கையில் இருந்து எழுந்து மிகவும் பதட்டமடைந்தார்கள். அவர்களை நான் ஆசுவாசப்படுத்தி தனிவட்டாட்சியரையும், அவருடன் இருந்த விடுதி காப்பளர்களையும் அவரவர் இருக்கையில் அமரசெய்தேன். பின்பு எங்களை விழுப்புரம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த தனி வட்டாட்சியர் மற்றும் அங்கிருந்த பணியாளர்கள் முன்பு எங்களை சுய பரிசோதனை செய்துகொண்டு எங்களிடம் எந்தவித பணமோ பொருளோ இல்லை என்பவதை உறுதி செய்த பின்னர் தனி வட்டாட்சியரையும் அவரது அறையையும் சோதனை செய்ததில் தனி வட்டாட்சியரின் பேண்ட் பாக்கெட்டில் இருந்த ரூபாய் 24,400/-த்தை எடுத்து கொடுத்தார் மேற்படி தொகை குறித்து கேட்க அவர் விடுதி காப்பாளர்கள் தீபாவளி பரிசாக கொடுத்தது என்று கூறினார். பின்பு அங்கிருந்த விழுப்புரம் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியின் காப்பாளர் திரு.K.மன்னன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் இருந்து ரூபாய்.8050/- கைப்பற்றப்பட்டது மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க தனி வட்டாட்சியருக்கு தீபாவளி பரிசாக கொடுக்க கொண்டு வந்தது என கூறினார் மேற்படி தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு வளவனூர் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியின் காப்பாளர் திரு.ஏழுமலை என்பவரை சோதனை செய்ய அவரிடம் இருந்து ரூபாய்.18,900/- கைப்பற்றப்பட்டது மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவரும் தனி வட்டாட்சியருக்கு தீபாவளி பரிசாக கொடுக்க கொண்டு வந்தது என

கூறினார் மேற்படி தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்பு அலுவலக வராண்டாவில் உட்கார்ந்து இருந்த தும்பூர் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி சமையலர் திரு.G.சங்கரலிங்கத்தை சோதனை செய்ய அவரிடமிருந்து ரூபாய் 2,000/- கைப்பற்றப்பட்டது மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவரும் தும்பூர் விடுதி சார்பாக தனி வட்டாட்சியருக்கு தீபாவளி பரிசாக கொடுக்க கொண்டு வந்தது என கூறினார் மேற்படி தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மற்றொருவரான விழுப்புரம் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி காவலர் திரு.M.ராமலிங்கத்தை சோதனை செய்ய அவரிடம் இருந்து ரூபாய் 2,700/-கைப்பற்றப்பட்டது மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் விடுதி காப்பாளர் திரு.K.மன்னன் அவர்களுடன் வந்ததாகவும் மேற்படி தொகை தனி வட்டாட்சியருக்கு தீபாவளி பரிசாக கொடுப்பதற்காக கொண்டு வந்தது என கூறினார் மேற்படி தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட நபர்களிடம் இருந்து கணக்கில் வராத தொகை ரூபாய் 56,050/- (ரூபாய் ஐம்பத்தாறாயிரத்து ஐம்பது மட்டும்) லஞ்சத்தொகை என தெரியவந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டு உயர் அதிகாரிகள் அறிவுரைப்படி விழுப்புரம் சார்நிலை கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அம்மா,

நான் இன்று 12.03.2019 மாலை 14.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக குறிப்பாணை எண் SC No.40203/2018/ADW/VPM,Dated:27.02.2019-ன்படி விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.06/2019 u/s 7 P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், இணைத்து சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

12/3/19

(ந.தேவநாதன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.